சேவை மையம் திறப்பு...

கோபி அருகே உள்ள டி.என்.பாளையம் அரசு ஆரம்ப சுகாதார வளாகத்தில் ஒருங்கிணைந்த ஓரிட சேவை மையத்தை (விழுதுகள்) சனிக்கிழமை திறந்துவைத்த வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன். உடன், கோட்டாட்சியர் ந.சிந்துஜா, தவெக மேற்கு மாவட்டச் செயலாளர் பிரதீப்குமார்.

சிறந்த முறையில் விமான நிலையங்கள் அமைக்க நடவடிக்கைகள்

அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்

சத்தியமங்கலம், ஆக. 29: கர்நாடகம், ஆந்திரத்தைப்போன்று சிறந்த முறையில் விமான நிலையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சேவை மையத்தை வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கு பவானிசாகர் எம்எல்ஏ வி.பி. தமிழ்ச்செல்வி தலைமை வகித்தார்.

நிகழ்ச்சிக்குப் பின்னர், செய்தியாளர்களிடம் வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் கூறியதாவது: தேமுதிக எம்எல்ஏ பிரேமலதா கூறியதுபோன்று இல்லாமல் சட்டப்பேரவையில் ஆக்கபூர்வமான விவாதங்கள் நடத்தப்படுகின்றன. ஓரிரு நிகழ்வுகளை வைத்து குறைகூறக் கூடாது.

சென்னை அருகே விமான நிலையத்துக்கு 2-3 இடங்கள் ஆலோசனையில் உள்ளன. கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் உள்ளதைப்போல சிறந்த முறையில் விமான நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வறட்சி பாதித்த மாவட்டங்கள் என்று தற்போது அறிவிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. செப்டம்பர் இறுதியில் அதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர் ஆய்வு செய்த பின்னர் அது தொடர்பாக அறிவிக்கப்படும் என்றார்.

ஏளூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

கோபி, ஆக.29: கோபி அருகே உள்ள ஏளூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் சனிக்கிழமை திறந்துவைத்தார்.

ஈரோடு மாவட்டம், கோபி அருகே உள்ள தடப்பள்ளி - அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் 24 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இதில் தடப்பள்ளி ரக்கன்கோட்டை வாய்க்கால் பாசனத்தில் முதல்போக நெல் சாகுபடிக்காக கடந்த ஏப்ரல் மாதம் தண்ணீர் திறக்கப்பட்டு விவசாயிகள் நெல் சாகுபடிக்கான பணிகளை மேற்கொண்டு வந்தனர். மேலும், நெல் அறுவடைக்கு தயாராகிய நிலையில் பாசனப் பகுதியில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டி விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ஏளூரில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. கோபி கோட்டாட்சியர் ந.சிந்துஜா தலைமை வகித்தார். நுகர்பொருள் வாணிபக் கழக மாவட்ட மேலாளர் மோகன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கலந்துகொண்டு நெல் கொள்முதல் நிலையத்தை திறந்து வைத்தார். முதற்கட்டமாக 8 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. நெல் அறுவடையின் வரத்துக்கேற்ப 39 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளன.

பின்னர் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேசியதாவது: நெல்லுக்கு கூடுதல் விலை அளிக்க விவசாயிகள் விடுத்த கோரிக்கையின்பேரில் சன்ன ரகம் ரூ.289, பொது ரகம் ரூ.159 உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. பாண்டியாறு - புன்னம்புழா திட்ட கோரிக்கை தொடர்பாக இருமாநில அரசுகளின் கூட்டமைப்பில் கேரளத்தோடு பேசி வருகிறோம். சுமுகமான முடிவு ஏற்பட வேண்டும் என்று நினைக்கிறோம் என்றார்.

பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் தளபதி மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

பெருந்துறையில் ‘விழுதுகள்’ மையம் திறப்பு

பெருந்துறை, ஆக. 29: பெருந்துறையில் ‘விழுதுகள்’ என்ற பெயரில் ஓரிட சேவை மையம் சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் ‘தமிழ்நாடு உரிமைகள் திட்டம்’ மூலமாகமாற்றுத்திறனாளிகளுக்கான அனைத்து மறுவாழ்வு சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் ‘விழுதுகள்’ என்ற பெயரில் வட்டார ஒருங்கிணைந்த ஓரிட சேவை மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி பெருந்துறை, சானிடோரியத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில்அமைக்கப்பட்டுள்ள புதிய ‘விழுதுகள்’ வட்டார ஒருங்கிணைந்த ஓரிட சேவை மையத் திறப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி ஆகியோர் திறந்துவைத்து சேவைகளைத் தொடங்கிவைத்தனர். இதில், மொடக்குறிச்சி சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் சண்முகம், பெருந்துறை முன்னாள் எம்எல்ஏ எஸ்.ஜெயக்குமார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

அறச்சலூர் நவரசம் மகளிர் கல்லூரியில்

பள்ளி மாணவிகளுக்கு உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி

அறச்சலூர் நவரசம் மகளிர் கலை, அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினரான தன்னம்பிக்கை பேச்சாளருக்கு நினைவுப் பரிசு வழங்கிய கல்லூரி நிர்வாகத்தினர்.

மொடக்குறிச்சி, ஆக.29: அறச்சலூர் நவரசம் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பள்ளி மாணவிகளுக்கான உயர்கல்வி வழிகாட்டி நிகழ்வு, கல்லூரி கலையரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் சர்மிளா வரவேற்றார். அறச்சலூர் நவரசம் மகளிர் கல்லூரி தலைவர் பி.செந்தில்குமார் தலைமை வகித்தார். செயலாளர் கு.செந்தில்குமார், பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி, தாளாளர் கார்த்திகேயன் ஆகியோர் வாழ்த்தினர்.

சிறப்பு அழைப்பாளராக உயர் கல்வி வழிகாட்டுதல் மற்றும் பட்டிமன்ற சிறப்பு பேச்சாளர் கோவை கவிதா வேணுகோபால் பங்கேற்று உயர்கல்வியில் உள்ள பல்வேறு வகையான பட்டப் படிப்புகள், பட்ட மேற்படிப்புகள், அவற்றின் மூலமாக கிடைக்கும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புகள், உயர்கல்வியின் மூலமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், அதிக மதிப்பெண்கள் பெறும் வழிகள், தேர்வு எழுதும் முறை, கல்லூரியை தேர்வு செய்யும் முறைகள் உள்பட மாணவிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

கல்லூரியின் துணைத் தலைவர் பரமசிவம், தி நவரசம் அகாதெமி சிபிஎஸ்இ பள்ளி தாளாளர் அருண்கார்த்திக், ஈரோடு, கரூர், நாமக்கல், திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளி மாணவிகள் 600-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். வணிகவியல் துறை தலைவர் எஸ்தர் விஜயகலா நன்றி கூறினார்.

ரயில் மோதி கல்லூரி மாணவர் உயிரிழப்பு

ஈரோடு, ஆக.29: சங்ககிரி அருகே ரயில் மோதி கல்லூரி மாணவர் உயிரிழந்தார்.

சேலம் மாவட்டம், சங்ககிரி கஸ்தூரிபட்டியைச் சேர்ந்தவர் ஸ்ரீரங்கன் மகன் முகேஷ் (18). சேலத்தில் உள்ள தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார். சில மாதங்களாக கல்லூரிக்கு செல்லவில்லை. கடந்த 28-ஆம் தேதி இரவு 11 மணிக்கு தன் வீட்டின் அருகே உள்ள தண்டவாளத்தை கடக்க முற்பட்டுள்ளார். அப்போது அந்த வழியே வந்த ரயில் மோதியதில் படுகாயமடைந்து சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

இதுதொடர்பாக ஈரோடு ரயில்வே போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கரிமொரா கிராமத்தில் உலவிய கரடிகள்



கரிமொரா கிராமத்தில் உலவிய இரண்டு கரடிகள்.

உதகை,ஆக.29: குன்னூர் அருகே உள்ள கிராமப் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இரண்டு கரடிகள் உலவியதால் பொதுமக்கள் அச்சமடைந்தனர்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் அருகே உள்ள கரிமொரா கிராமத்துக்குள் இரவு நேரத்தில் நுழைந்த 2 கரடிகள், அங்கு கட்டி முடிக்கப்படாத கட்டடத்துக்குள் நீண்ட நேரம் உலவிக் கொண்டிருந்தன. பின்னர் குடியிருப்புகளின் பின்புறம் உள்ள தேயிலைத் தோட்டங்களில் சுற்றித் திரிந்தன.

இதனால் தொழிலாளர்கள் பணி முடிந்து இரவு நேரங்களில் வீட்டுக்கு திரும்பும்போதும், அதிகாலை தேயிலைத் தோட்டத்துக்கு செல்லும்போதும் அச்சத்துடன் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அசம்பாவித சம்பவங்கள் நடக்கும் முன்பாக வனத் துறையினர் கூண்டு வைத்து கரடிகளை பிடித்து அடர்ந்த வனப் பகுதிக்குள் விட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை: விவசாயிகளுக்கு பயிற்சி

பயிற்சி முகாமில் பங்கேற்ற வேளாண் அலுவலர்கள் மற்றும் விவசாயிகள்.

சத்தியமங்கலம், ஆக.29: நிலக்கடலைப்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பயிற்சி பவானிசாகரை அடுத்த வரப்பாளையம் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அட்மா திட்டத்தின் சார்பில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமுக்கு, பவானிசாகர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் யசோதா தலைமை வகித்தார். உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் அருள்வடிவு, வறட்சியால் பாதிக்கப்படும் நிலக்கடலை சாகுபடி, விவசாயிகளுக்கு வழங்கப்படும் அரசின் மானிய திட்டங்கள், வறட்சியில் இருந்து தற்காத்துக் கொள்ள பயிர்காப்பீடு செய்வதன் அவசியம் ஆகியவை குறித்து பேசினார்.

நிலக்கடலை பயிரில் துவரை, ஆமணக்கு ஊடுபயிர் சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகள் வருமானத்தை அதிகரிக்கவும், நிலக்கடலை பயிரில் ஏற்படும் டிக்கா இலைப்புள்ளி நோய் மற்றும் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்கள் விளக்கம் அளித்தனர்.

இப்பயிற்சி முகாமில் வேளாண்மை துணை இயக்குநர் அரசப்பன், வேளாண்மை அறிவியல் நிலைய உழவியல் துறை பேராசிரியர் சரவணன், உதவி வேளாண்மை அலுவலர் வள்ளி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் கருணாம்பிகை மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் அன்புராஜ் மற்றும் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

SRINIVASA VIDHYALAYA
MATRIC HIGHER SECONDARY SCHOOL
GANDHINAGAR - UDUMALPETAI

WE ARE HIRING!

Applications are invited from experienced, passionate, and dedicated educators for the Academic year – 2027-2028

ACADEMIC COORDINATOR – PRIMARY
- Minimum 5 years of experience as Vice Principal / Academic Coordinator
- Strong academic planning and leadership skills
- Ability to implement child-centred learning methodologies
- Excellent communication and interpersonal skills
- Age below 45 years

TEACHER IN-CHARGE – KINDERGARTEN
- Minimum 5 years of experience as Kindergarten coordinator / teacher
- Strong knowledge of Early Childhood Education
- Experience in implementing activity-based learning methodologies
- Excellent communication skills
- Age below 45 years

TEACHING STAFF
- ○ PGT – All Subjects
- ○ TGT – All Subjects
- ○ Primary Teachers
- ○ Kindergarten Teachers

- Minimum 5 years of experience
- Graduate / Post graduate with B.Ed / D.T.Ed / D.El.Ed / Montessori training
- Strong subject knowledge
- Passionate, patient and child-friendly approach
- Excellent communication skills

COMPETITIVE REMUNERATION | EPF / ESI / GRATUITY OFFERED | GREAT WORKING ENVIRONMENT

Apply to :
✉ hr@svmhss.org | ☎ 9843055105

✦ Inviting teachers to ignite young minds ✦

इंडियन बैंक இந்தியன் வங்கி
அண்ணா நகர் கிளை
எண்.143, Y பிளாக் 3வது தெரு, அண்ணா நகர்,
சென்னை - 600 040. தொலைபேசி : 044-26213300/3174.
மின்னஞ்சல் : annanagarchennai@indianbank.bank.in

கோரிக்கை அறிவிப்பு வெளியீடு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப்பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு 06.08.2026 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டது.

பெறுநர். **(1) N K இஞ்சினியரிங், (கடன்தாரர்), பங்குதாரர்கள் : Ms. சதர்லின் ரோஸ் மொசாதாஸ் மற்றும் திரு. E. அரவிந்தன், முகவரி 1 :** K A காம்ப்ளெக்ஸ், எண்.24, கருணீகர் தெரு, தரை தளம், மதுரவாயல், சென்னை - 600 107, **முகவரி 2 :** மனை எண்.1E, ஜீவரத்தினம் 3வது தெரு, KSR நகர், அம்பத்தூர், சென்னை - 600 053, முகவரி 3 : எண்.2/4, போரூர் மெயின் ரோடு, காட்டுநாயக்கன் நகர், பம்மதுகுளம், ரெட்ஹில்ஸ், சென்னை - 600 052, **(2) Ms. சதர்லின் ரோஸ் மொசாதாஸ், (பங்குதாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்), முகவரி 1 :** 3, VOC நகர், அந்தியூர், புதுப்பாளையம், கெட்டிசமுத்திரம், ஈரோடு, தமிழ்நாடு - 638 501, **முகவரி 2 :** எண்.9/17, பாலாஜி தெரு, கோபாலநாயக்கர் நகர், பாடி, சென்னை - 600 050, **(3) திரு. E. அரவிந்தன், (பங்குதாரர்/ஜாமீன்தாரர்),** எண்.295, R R நகர், கொடுங்கையூர், சென்னை - 600 118.

பொருள் : இந்தியன் வங்கி, அண்ணா நகர் கிளையில் உள்ள தங்கள் கடன் கணக்கு எண்கள்.7813141777 & 7818064669 - சம்பந்தமாக.

நீங்கள் பெற்ற கடனுக்காக **05.08.2026** வரை செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத்தொகையான **ரூ.86,65,938/- (ரூபாய் எண்பத்து ஆறு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து எட்டு மட்டும்)** இதில் மேலும் 05.08.2026 முதல் திரும்ப செலுத்தும் தேதி வரை ஒத்துக்கொண்ட மேலதிக வட்டியுடன் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள்.

05.08.2026 அன்று வரை செலுத்த வேண்டிய தொகையான **ரூ.86,65,938/- (ரூபாய் எண்பத்து ஆறு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து எட்டு மட்டும்)** திரும்ப செலுத்துமாறு **06.08.2026** தேதியிட்ட மேற்குறிப்பிட்ட SARFAESI சட்டத்தின் கீழ் அறிவிப்பை பதிவுத்தபால் மூலம் வங்கி அனுப்பியது. பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு திரும்பி வந்துவிட்டது.

நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையான **ரூ.86,65,938/-** மேலும் 05.08.2026 முதல் மேலதிக வட்டியையும் சேர்த்து கோரிக்கை அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில், பிணை வைப்புச் சட்ட அமலாக்கத்தை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட ஈடுபெற்ற ஆஸ்தியை சுவாதீனப்படுத்தும். வங்கிக்கு உள்ள பிற பரிகார வழிமுறைக்கு பாதகமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அட்டவணை

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

அடமான சொத்து : பழைய எண்.72, புதிய எண்.18, ஜீவரத்தினம் 3வது தெரு, K.S.R. நகர், அம்பத்தூர் கிராமம் மற்றும் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை - 600 053-ல் உள்ள 2590 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.1E, சர்வே எண்.294/1, பட்டா எண்.592, TSLR-ன்படி வார்டு B, பிளாக் எண்.0072, T.S. எண்.8/4, சர்வே எண்.294/1 & 294/2-ல் அடங்கியுள்ளது. துணை பிரிவு CMDA அங்கீகார PP எண்.1298/01/F1, கோப்பு எண்.737/01/F1. எல்லைகள் - வடக்கில் : மனை எண்.1D1, தெற்கில் : 30 அடி அகல ஜீவரத்தினம் 3வது தெரு, கிழக்கில் : மனை எண்.1F, மேற்கில் : 12 அடி அகல பாதை. பரிமாணங்கள் - வடக்கில் : 37'-0", தெற்கில் : 37'-0", கிழக்கில் : 70'-0", மேற்கில் : 70'-0".

கடனீட்டு சொத்து : இருப்பு, புத்தக கடன்கள் மற்றும் இயந்திரங்களின் கடனீடு.

தேதி : 30.08.2026
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.

equitas Small Finance Bank
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002

சுவாதீன அறிவிப்பு
2002 கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள், விதி 8 (1)
(அசையா சொத்துக்காக)

கம்பெனிகளின் சட்டம் 1956-ன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமான M/s.எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் மற்றும் கம்பெனிகளின் சட்டம் 2013 பிரிவு 2 (20) மற்றும் பேங்கிங் கம்பெனி, வங்கி ஒழுங்குமுறை சட்டம், 1949 பிரிவு 5 (C)-ன் கீழ் பதிவு அலுவலகம் 4வது தளம், பேஸ்-II, ஸ்பென்சர் பிளாசா, 769, அண்ணாசாலை, சென்னை - 600 002 மற்றும் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் கிளை அலுவலகம் கொண்டுள்ள கீழே கையொப்பமிட்டுள்ளவர் அங்கீகாரம் பெற்ற அதிகாரியாக இருக்கின்றபடியால் 2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)-ன் மற்றும் விதி 3-ன் கீழ் கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் **1. திரு. அசோக்குமார்.K, 2.திருமதி.நதியா அசோக்குமார், (கடன் எண். 700011396504 & 700011396517)** ஆகியோர்களுக்கு **12/06/2026** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள **11/06/2026 அன்று வரை உள்ள கடன் பாக்கித் தொகையான ரூ.13,45,116/- (ரூபாய் பதிமூன்று லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து நூற்று பதினாறு மட்டும்)** மேலும் ஒப்பந்தத்தின் படி தொடர்புடைய வட்டி, அபராத வட்டி, கட்டணங்கள், செலவுகள் மற்றும் பல சேர்த்து இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது.

கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் கடன் தொகையை திருப்பி செலுத்த தவறியதால் குறிப்பாக கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்குறிப்பிட்ட சட்டம், பிரிவு 13 (4) விதி 8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

குறிப்பாக கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதமான பரிவர்த்தனைகளும் வைத்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பரிவர்த்தனை வைத்து கொண்டால் அது கடன்தாரர் செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் அதற்குண்டான வட்டியுடன் சேர்த்து M/s.எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும்.

ஈட்டுறுதி சொத்துக்களின் அட்டவணை

திரு.K. அசோக்குமார் அவர்களுக்கு சொந்தமான சொத்து: ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு துணைப்பதிவு மாவட்டம், ஈரோடு மாவட்டம், ஈரோடு தாலுக்கா, ஈரோடு மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட ஈரோடு "C" கிராமத்தில் (காசி பாளையம்), சர்வே புல எண்.1198/1B, தரிசு நிலம் ஹெக்டேர் 6.32, தீர்வை ரூ.10.68, இதன் புதிய மறு சர்வே எண்.1317/1, அதன்பிறகு துணைப்பிரிவு மறு சர்வே எண்.1317/1Aன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.92.96 (தரிசு நிலம் ஏக்கர் 2.29 1/2) தீர்வை ரூ.3.89, துணைப்பிரிவு செய்யப்பட்டு மறு சர்வே எண்.1317/1A1-ன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.07.59, தீர்வை ரூ.0.32, (பட்டா எண்.7113), மறு சர்வே எண்.1317/1A2-ன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.11.36, தீர்வை ரூ.0.47, (பட்டா எண்.7113), மறு சர்வே எண்.1317/1A3-ன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.00.36, தீர்வை ரூ.0.02, (பட்டா எண்.8401), மறு சர்வே எண்.1317/1A4-ன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.00.37, தீர்வை ரூ.0.02, (பட்டா எண்.8402), மறு சர்வே எண்.1317/1A5-ன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.17.00, தீர்வை ரூ.0.71, (பட்டா எண்.7113), மறு சர்வே எண்.1317/1A6-ன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.18.43, தீர்வை ரூ.0.77, (பட்டா எண்.7113), மறு சர்வே எண்.1317/1A7-ன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.23.29, தீர்வை ரூ.0.97, (பட்டா எண்.8402), மறு சர்வே எண்.1317/1A8-ன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.03.70, தீர்வை ரூ.0.15, (பட்டா எண்.7113), மறு சர்வே எண்.1317/1A9-ன்படி தரிசு நிலம் ஹெக்டேர் 0.10.86, தீர்வை ரூ.0.45, (பட்டா எண்.7113), மொத்தம் சேர்த்து தரிசு நிலம் ஹெக்டேர் - 0.92.96, தரிசு நிலம் ஏக்கர் 2.29 1/2 செண்ட் நிலம் பல்வேறு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு 27.09.2023 தேதியிட்ட DTCP மனு எண்.ROC எண்.80HG045W/2023/TCP மற்றும் 04.12.2023 தேதியிட்ட ஈரோடு நகர மேம்பாட்டு அலுவலகத்தால் ROC எண்.80HG045W/2023/TCPல் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் 04.07.2024 தேதியிட்ட ஈரோடு மாநகராட்சி அவர்களால் ந.க. எண்.E1/752/2024ன்படி அங்கீகரிக்கப்பட்டு, இணை ஆணையாளர், ஈரோடு நகர திட்ட ஆணையம் மூலமாக SWP/DTCP / ஈரோடு LPA / மனைப்பிரிவு அங்கீகார எண்.499/2023 மற்றும் திட்ட குழுமத்தின் SWP/DTCP / ஈரோடு / LPA / திட்ட அனுமதி எண்.46/2023ன்படி மேற்குறிப்பிட்ட மனைப்பிரிவு "சக்தி நகர்" என பெயரிடப்பட்டுள்ள மனைப்பிரிவில் மனை எண்.29ன் பரப்பளவு - 1000 சதுர அடி நிலம். இதில் 12 சதுர அடி நிலம் ஸ்ப்ளே-க்காக ஒதுக்கப்பட்ட மீதமுள்ள 988 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து பிற உடைமை உரிமைகள் உட்பட, கீழ்கண்ட எல்லைகளுக்கு உட்பட்டது. கிழக்கில் : மனைப்பிரிவில் உள்ள பொது நிலம் (B), மேற்கில் : 9.00 மீட்டர் அகல வடக்கு தெற்காக சாலை, வடக்கில் : மனை எண்.30, தெற்கில் : 10.0 மீட்டர் அகல கிழக்கு மேற்காக மனைப்பிரிவு சாலை. அளவுகள் : வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 25'0" சதுர அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 20'0" + 5'0" சதுர அடி, கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 40'0" சதுர அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 35'0" + 5'0" சதுர அடி அதனுடன் வழக்கமான நடைபாதை மற்றும் உடைமை உரிமைகள் உட்பட. இந்த சொத்து மறு சர்வே எண்.1317/1A2ல் உள்ளது. மேற்குறிப்பிட்ட சொத்து முன்னர் காசிப்பாளையம், 3வது நகராட்சி, வார்டு எண்.11, கல்யாணசுந்தரம் தெரு, (சக்தி நகர்) எல்லைக்குட்பட்டது. தற்போது மேற்குறிப்பிட்ட சொத்து ஈரோடு மாநகராட்சி வார்டு எண்.60ன் எல்லைக்குட்பட்டது. மேலும் அதனுடன் உள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் அங்கு நிலத்தில் தற்போது அல்லது நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள கட்டுமானங்கள் மற்றும் பூமியில் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிலத்தில் நிலையாக பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் பொருட்கள் தற்போதும் எதிர்காலத்திற்கும் சேர்ந்தது மற்றும் அனைத்து வசதி உரிமைகள் / வழக்கமான உரிமைகள் உட்பட.

தேதி : 28.08.2026
இடம்: ஈரோடு மாவட்டம்

அதிகார்பூர்வ அதிகாரி
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911

மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில்
மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் **2002**, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : மஞ்சூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர்கள் : 1) M/s.SS அசோசியேட்ஸ், உரிமையாளர் : திரு.N.S.மகேஷ் கண்ணன், 15/468, ராம்குமார் ஹவுஸ், மைனிலி கிராமம், பெங்கால்மட்டம் அஞ்சல், நீலகிரி - 643204. **2) திரு.N.S.மகேஷ் கண்ணன், த/பெ.N.சுப்பிரமணி,** 15/468, ராம்குமார் ஹவுஸ், மைனிலி கிராமம், பெங்கால்மட்டம் அஞ்சல், நீலகிரி - 643204. **3) H.மஞ்சுளா,** 15/468, ராம்குமார் ஹவுஸ், மைனிலி கிராமம், பெங்கால்மட்டம் அஞ்சல், நீலகிரி - 643204. **உத்திரவாதம் அளித்தவர்கள் : 1) திருமதி.S.சீதை, க/பெ.சுப்பிரமணியன்,** 15/468, ராம்குமார் ஹவுஸ், மைனிலி கிராமம், பெங்கால்மட்டம் அஞ்சல், நீலகிரி - 643204. **2) திரு.M.ரவி, த/பெ.B.N.மாதா கவுண்டர்,** பெங்கால் கிராமம், பெங்கால் மட்டம் அஞ்சல், நீலகிரி - 643204. **கடன் நிலுவைத் தொகை : 28.08.2026 வரையில் ரூ.37,60,129.99 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 03.02.2020. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 24.09.2021. சொத்து விபரம் :** 17.00 செண்ட் விஸ்தீரணம் உள்ள குடியிருப்பு கட்டிட சொத்து பின்வருமாறு அமைந்துள்ளது. கதவு எண்.15/576, RS No. 1202/5B, (பழைய S.Nos.358/11 & 12), மைனலாமட்டம் கிராமம், பாலகோலா கிராம பஞ்சாயத்து, குந்தா தாலுக்கா, உதகமண்டலம் ஜாயிண்ட் 2 சார்பதிவு மாவட்டம், நீலகிரி மாவட்டம் 643204. சொத்தின் எல்லைகள் : வடக்கில் சண்முகம் அவர்களின் தேயிலை தோட்டம், தெற்கில் தேவகி அவர்களின் தேயிலை தோட்டம், கிழக்கில் பொது சாலை, மேற்கில் B.K.நஞ்சன் அவர்களின் தேயிலை தோட்டம். **திரு.N.S.மகேஷ் கண்ணன் அவர்களுக்கு சொந்தமான சொத்து. காப்பு விலை : ரூ.26,00,000.00. முன்வைப்புத் தொகை : ரூ.2,60,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. . ஏலம் நடைபெறும் தேதி : 29.09.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன்.** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 22.09.2026 முதல் 28.09.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 29.09.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 84899 03016**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **29.09.2026**, மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, மஞ்சூர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 84899 03016, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 28.08.2026
இடம் : மஞ்சூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா